**தலைப்பு 326 – சமுதாய அடிப்படை சீர்திருத்தத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமுதாய அடிப்படை சீர்திருத்தத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்தத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூன் 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 04 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சமுதாய அடிப்படை சீர்திருத்தத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) சமுதாய அடிப்படை சீர்திருத்தத் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டி இருந்தது. அந்தத் தேவைப்பாடுகள் புறக்கணிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7(ii), ‘‘நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கான வழிகாட்டல்’’ பந்தியின் பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தராக வருமானங்களை சேகரிக்கின்ற ஏனைய அமைச்சுக்கள் அந்த வருமானங்களை தமது நிதிச் செயலாற்றல் கூற்றில் திறைசேரியில் இருந்து கிடைத்த கட்டு நிதிகளாகக் கருதி ஏசீஏ-3 மாதிரிப் படிவத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தருக்காக அவ்வாறு சேகரிக்கப்பட்ட ரூபா 10,595,473 தொகை 2018 ஆம் ஆண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றில் வரியல்லா வருமானம் மற்றும் ஏனைய வருமான பெறுவனவுகளின் கீழ் ஏசீஏ-1 படிவத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஆலோசனையை பின்பற்ற வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது குறித்துரைத்த மாதிரிப் படிவத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**1.6.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தி | 2017 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வு சபை நியமிக்கப்பட்டிருந்த போதிலும், பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வின் பிரகாரமான பரிந்துரைகள் 2019 மே 19 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஆலோசனைகள் பின்பற்றப்பட வேண்டும். | துரிதமாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீண்டெழும் செலவின விடயங்கள் 05 இற்கான ஒதுக்கப்பட்ட ரூபா 10.76 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகளில் 15 சதவீதத்திற்கு மேற்பட்ட அதாவது ரூபா 1.68 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஒவ்வொரு செலவின விடயத்திலும் சேமிப்பு சதவீதம் 11 சதவீதம் முதல் 49 வீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்பார்த்த பிரகாரம் செலவினம் ஏற்படாமையினால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 05 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான | நிர்மாண மதிப்பீடு பழைமை அடைந்தமை, பழுதுபார்த்தல் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 10.44 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகளில் 35 சதவீதம் அதாவது ரூபா 3.66 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஒவ்வொரு செலவின விடயத்திலும் சேமிப்பு சதவீதம் 20 வீதம் முதல் 78 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | காலம் போதியளவில் காணப்படாமை, எதிர்பார்த்த பிரகாரம் செலவினங்கள் ஏற்படாமை மற்றும் கட்டு நிதி கிடைக்காமை என்பன சேமிப்புக்கான காரணங்கள் ஆகும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் மாற்றல்கள் மூலம் செலவின விடயம் 2102 இற்காக பெறப்பட்ட ரூபா 1.44 மில்லியன் தொகையான முழுமையான நிதியேற்பாடும் பயன்படுத்தப்படவில்லை. | மாற்றல்கள் மூலம் பெறப்பட்ட நிதியேற்பாடு பயன்படுத்தப்பட வேண்டும். | கட்டு நிதி கிடைக்காமையின் அடிப்படையில் நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. |

### 2.2 முற்பணக் கணக்கு மீதி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 131,020 தொகையான கடன் மீதி 07 வருடங்களுக்கு மேற்பட்ட கால வீச்சை கடந்திருந்த போதிலும், ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளை துரிதமாக பூர்த்தி செய்து அந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளை துரிதமாக பூர்த்தி செய்து கடனை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் முடிவடைந்ததும் உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வாய்வு

### 3.1 எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் அடையப்பெறாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு மாவட்டத்தில் சமுதாய அடிப்படையிலான சீர்திருத்த அலுவலகத்திற்காக இணைக்கப்பட்டுள்ள கொழும்பு மாவட்டத்தின் 13 பிரதேச செயலகங்களுக்கு இடையே 7 | உயர் முகாமைத்துவத்தால் உரிய நிறுவனங்களுடன் தொடர்புடைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உத்தியோகத்தர் வெற்றிடத்தின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலகங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (சமுதாய சீர்திருத்தம்) இல்லாமையின் காரணமாக சமுதாய அடிப்படையிலான சீர்திருத்தஞ் செய்யப்பட்ட நெறிதவறியவர்கள் மீண்டும் நெறிதவறுவனத் தடுப்பதற்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல், அந்த நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல், குடும்பநல அபிவிருத்தி திட்டங்களை தயாரித்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் நிறைவேற்றுதல் போன்ற செயற்பாடுகள் முறையான பிரகாரம் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | | அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நெறிதவறியவர்களை சீர்திருத்தஞ் செய்ததன் பின்னர் மீண்டும் தாம் வாழ்ந்த மிகவும் பரீட்சயமான சூழலுக்கு உள்நுழைவதன் காரணமாக நெறிதவறியவர்களை மீண்டும் தவறுகளில் ஈடுபடுவதைத் தடுப்பதற்காக நெறிதவறியவர்களிற்காக சமயம் சார்ந்த ஆலோசனைகள் மற்றும் இணையான தனியார் ஆலோசனைகள் அவர்களின் அபாய மட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்காக சமூக அடிப்படையிலான சீர்த்திருத்த அலுவலகத்தில் தேவையான சுற்றாடல் மற்றும் இடவசதிகள் காணப்படவில்லை. | சில நீதிமன்ற வலயங்களை மேவுகை செய்யும் வகையில் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானது. | தேவையான சுற்றாடல் மற்றும் இடவசதிகள் இல்லை. |
| (இ) | மீளாய்வாண்டில் நெறிதவறியவர்களுக்காக 399 தொழில்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் மற்றும் கொடுப்பனவு செய்யப்படாத சமுதாய வேலைகள் மற்றும் 893 சிரமதான நிகழ்ச்சித் திட்டங்களும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியாக முறையே 292 மற்றும் 792 நிகழ்ச்சித்திட்டங்களே அமுல்படுத்தப்பட்டிருந்தன. | அங்கீகரிக்கப்பட்ட திட்டமிடப்பட்ட இலக்குகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நெறிதவறியவர்களின் சிரமதான நிகழ்ச்சித்திட்டங்களுக்காக சமுதாய வேலைகளில் ஈடுபடுத்த வேண்டியிருந்ததுடன் சமுதாய வேலைகளுக்காக ஈடுபடுத்துவதை விட சீர்த்திருத்தப் பணிகள் தொடர்பில் கூடுதலாக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**3.2 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| குருணாகல் மாவட்ட சமுதாய சீர்த்திருத்த நிலையத்திற்காக கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 2012 திசெம்பர் 14 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான காணி முறையான பிரகாரம் கையேற்கப்படாமை மற்றும் முறையான களப்பரிசோதனை மேற்கொண்டு பொருத்தமான காணியொன்றை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை போன்ற விடயங்களின் காரணமாக நிர்மாணங்கள் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. 2019 மே 25 ஆந் திகதியிலும் இது தொடர்பாக வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமையினால் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 231,575 தொகை பயனற்ற செலவினத்திற்கு உள்ளாகியிருந்தது. | உயர் முகாமைத்துவத்தால் முறையான நிர்வாகத் தீர்மானங்கள் எடுக்க வேண்டியுள்ளது. | இந்தக் காணியில் சமுதாய சீர்திருத்த நிலையத்தை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்த்த நோக்கத்தை நிறைவேற்ற முடியாதுள்ள நிலைமையொன்று ஏற்படுகின்றமையினாலும் 2015 ஆம் ஆண்டின் இறுதி அரைப் பகுதியில் திணைக்களம் அமைச்சு என இரண்டின் கீழும் அவ்வவ்போது நியமிக்கப்பட்டமையினால் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. |

**3.3 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நெறிதவறியவர்களுக்காக அறிவுரைகள், சமய மற்றும் கல்விரீதியான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தும் போது ஒரு சந்தர்ப்பத்தின் போது நெறிதவறியோர் சமூகமொன்றை சீர்த்திருத்தம் செய்வதற்கு போதியளவான வசதிகள் மற்றும் அதற்குப் பொருத்தமான நிலையம் காணப்படாமையினால் சீர்திருத்த உத்தியோகத்தர்களுக்கு அந்தப் பணிகளைச் செய்து கொண்டு செல்லும் போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிஏற்பட்டிருந்தது. | நிறவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருக்கின்றமையினால் சீர்திருத்த பணிகளை மிகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் அமுல்படுத்துவதற்கு ஆகக் குறைந்தது மாவட்ட மட்டத்திலேனும் ஒரு சீர்திருத்த நிலையத்தை தாபிக்கும் இயலுமையை ஆராய்தல். | சமுதாய சீர்திருத்த அலுவலகத்திற்காக ஒதுக்கப்பட வேண்டியிருந்த இட அளவுகள் தொடர்புகள் அண்ணளவான திட்டமொன்று நீதி அமைச்சிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதுடன் சமூகமய அறிவுரைகளுக்காக பிரத்தியேக நிலையமொன்றின் தேவை அதிகமாகக் காணப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சமுதாய சீர்திருத்த நெறிதவறியவர்களில் அனேகமானோர் மதுபானம் தொடர்பான தவறிழைத்தவர்களாக இருந்ததுடன் அந்த நெறிதவறியவர்களை சீர்திருத்தம் செய்வதற்குத் தேவையான சிகிச்சைகளுக்காக அனுப்பப்பட்டிருந்த போதிலும், உரிய சிகிச்சை நிலையங்களில் போதியளவான இடவசதிகள் காணப்படாமையின் அடிப்படையில் நெறிதவறியவர்களுக்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கு காலமொன்று காத்திருக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக சீர்தித்த செயற்பாடுகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்லுதலில் பிரச்சினைகள் தோன்றியிருந்ததுடன் நெறிதவறியர்களை மீண்டும் மதுபானத்திற்காக தொடர்புபடுவதன் மூலம் நெறிமுறைகள் இழக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்ட போதிலும் அதற்கான தீர்வுகள் வழங்கப்படவில்லை | - மேற்படி - | அவதானிப்பை ஏற்றுக்கொள்வதுடன் மதுபான சிகிச்சை நிலையங்களில் இடவசதிகள் போதியளவில் இல்லாமையினால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடி குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வைத்தியசாலைகளை, சிகிச்சை நிலையங்களாக பெற்றுக்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. |

**4. நல்லாளுகை**

**4.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| அரசாங்க நிறுவனங்களினால் மக்களுக்கு மற்றும் ஏனைய தரப்பினர்களுக்கு தகவல்களை வழங்குவதற்கு தேவைப்படுவதனால் சமுதாய அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களத்தால் அதற்காக இணையதளமொன்றை வடிவமைப்பதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு 2013 ஏப்ரல் 17 ஆந் திகதி ரூபா 284,700 தொகையொன்று செலுத்தப்பட்டு இதுவரையில் 06 | ஏற்பாடுகளின் பிரகாரம் மக்களுக்கு தகவல்களை வழங்குவதற்குத் தேவையான வழிமுறைகளை எடுத்தல். | அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்துடன் கலந்துரையாடி இந்த வருட இறுதிக்கு முன்னர் செயற்பாடுகளை முடிவுறுத்தவுலுக்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

வருடங்களுக்கு மேற்பட்ட காலம் ஒன்று கடந்திருந்தது. 2019 மே 31 ஆந் திகதி வரையில் இணையத்தளத்தில் ஆங்கில மொழியின் ஆரம்பத்திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்ததுடன் அதன் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பான சமுதாய அடிப்படையிலான சீர்த்திருத்த திணைக்களத்தால் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்துடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்க உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படாதிருந்ததுடன் கணக்காய்வுத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுத் நடவடிக்கைகளைத் திட்டமிடல். | உள்ளகக் கணக்காய்வாளர் பதவி மற்றும் பதவியணியினர் என்பவற்றை அங்கீகரித்துக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது. |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அமைச்சினால் உதவி ஆணையாளர் பதவிக்காக மீளாய்வாண்டின் போது நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டிருந்தும் நியமனம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அபிவிருத்தி உத்தியோகத்தர் வெற்றிடத்தை நிரப்புவதற்காக இணைந்த சேவைகள் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தமை மற்றும் சாரதி வெற்றிடங்களை நிரப்புமாறு அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி | உயர் முகாமைத்துவத்தால் உரிய நிறுவனங்களுடன் தொடர்பாகவுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்ளுகின்றோம் |

செய்யப்படாதிருந்த பதவியணியினர் வெற்றிடங்களுக்கிடையே பிரதி ஆணையாளர் பதவி, கணக்காளர் பதவி, நிர்வாக உத்தியோகத்தர் பதவி, மொழி பெயர்ப்பாளர் பதவி (தமிழ்), சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் பதவிகள் 21 மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் 56 ஆகும். இதன் காரணமாக கடமைச் செயற்பாடுகளை வினைத்திறனாக நடாத்திச் செல்வதற்கு இடையூறுகள் காணப்பட்டமை, மொழி பெயர்ப்பாளர் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமை, சீர்திருத்த கட்டளைகள் வழங்கப்படுகின்ற தவறிழைத்தவரை சீர்திருத்தம் செய்யும் போது பிரச்சினைகள் ஏற்பட்டமை மற்றும் மதுப்பானங்களில் இருந்து நிவாரணமளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை சரியான பிரகாரம் நடாத்துவதற்கு முடியாதிருந்தமை போன்ற சீர்திருத்த செயற்பாடுகளை முறையாக நடாத்திச் செல்லுதல் சிக்கலானதாக இருந்தது.